செய்தி வெளியீடு எண்:096 நாள் : 13.02.2016

செய்தி வெளியீடு

**மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகம், கே.கே. நகர், சென்னை–78.**

**அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் – 2015**

**நாள்: 15.2.2016 மற்றும்16.2.2016**

**விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் மாநில விருதுகள் வழங்கும் விழா**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை பின்பற்றி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3–ஆம் நாள் "**அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக**" தமிழகத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டிற்கான அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம், 15.2.2016 அன்று மாற்றுத்திறனாளிகளுக்கு மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளும் மற்றும் 16.2.2016 அன்று அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் மற்றும் மாநில விருதுகள் வழங்கும் விழாவாக அனுசரிக்கப்படுகிறது.

இத்தினத்தில் பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களின் கீழ், உதவி உபகரணங்கள் மற்றும் மறுவாழ்வு உதவிகளும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்காக சேவை புரிந்த சிறந்த தொழிலதிபர்கள், சிறந்த சமூகப் பணியாளர்கள், சிறந்த ஆசிரியர்கள், சிறந்த நிறுவனம், மற்றும் மாற்றுத் திறனாளிகளில் சிறந்த பணியாளர்கள் ஆகியோருக்கு மாநில விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்விழா தொடர்பாக 15.2.2016 அன்று காலை 09.30 மணிக்கு சென்னை, அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள் துவக்கி வைத்தும் அன்று பிற்பகல்

5 மணியளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி விழாப்பேருரையாற்றவுள்ளார்கள்.

16.2.2016 அன்று காலை 10.00 மணி அளவில் அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கில், மாற்றுத் திறனாளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. மாலை 5.00 மணியளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு மாநில விருதுகளும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்களும், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளும் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்களால் வழங்கப்படவுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**